உ

ஓம் நமோ நாராயணா

# கண்ணன் கனி அமுதங்கள்
# பஜனைப் பாடல்களுடன்



தொகுத்தவர் : கவிமணி அன்னைதாஸன்

கற்பகக் கனி ஆன்மீக வெளியீடு - 02

“ஸ்ரீரங்கம்”

ஊரெழு

உ

ஓம் நமோ நாராயணா

# கண்ணன் கனி அமுதங்கள்

# பஜனைப் பாடல்களுடன்



தொகுத்தவர் : *கவிமணி அன்னைதாஸன்*

கற்பகக் கனி ஆன்மீக

வெளியீடு - 22

"ஸ்ரீரங்கம்"

உஹரெமு.

23.09.2014

# கண்ணன் கனி அமுதங்கள்

**பருக முன் பகவானைப் பாடும் மெய்யடியார்களே!**

பகவான், ஸ்ரீகிருஷ்ணன், மாதவன், கோவிந்தன், நாராயணன் எனப் பல நூறு பெயர்களுடன் பக்தர்களின் மனதில் வீற்றிருப்பவன் பரந்தாமன். அவன் பெயர் நாவினால் ஓத அவன் ரூபம் எம்மனதில் தோன்றும். இத்தகு நாம அர்ச்சனைகள் எம் ஒவ்வொருவராலும் இலகுவில் செய்யக் கூடியது.

எனவேதான் அடியேன் எனக்கேயுரிய பாணியில் பாடல் களைத் தொகுத்து இம்மலரூடாக யாவரும் பாடிப் பரவும் வண்ணம் நியூ உதயா ஜுவலர்ஸின் அனுசரணையுடன் உங்கள் கரங்களில் தவள விட்டிருக்கிறேன்.

நவராத்திரி காலமாகையால் அவளுக்குரிய மலராக அமைக்கலாம் என்று கூறிய பொழுது ஐயா, இது வல்லீபுர மாயவனின் கொடியேற்ற காலம் அவனுக்குரியதாகத் தொகுத்துத் தாருங்கள் என்ற அவர்களின் கூற்று அவர்கள் எவ்வளவு தூரத்திற்கு இம் மாயவன் மீது மனங் கொண்டு வழிபடுகிறார்கள் எனத் திகைக்க வைத்தது. அவர் களுடைய வேண்டுகோளின்படி கண்ணனை ஓத வல்ல ஆழ்வார் களின் திருப்பாசுரங்களுடன் அடியேனால் ஆக்கப்பட்ட எல்லோராலும் பாடப்படுகின்ற எளிய பஜனைப் பாடல்களும் இசை அமுதங்களாகி கண்ணனைப் பாடிப் பரவ வாய்ப்பாக உள்ளன.

அம்பிகை அமுதங்கள், இல்லத்தில் இருளகற்றும் திருமுறைத் தேனமுதங்களுடன் கூட இது இவர்களின் 3வது அனுசரணையில் வரும் கண்ணன் கனி அமுதங்கள் வெறும் இலாபமல்ல, எம் இலக்கு கிடைக்கும், இலாபத்தில் ஒரு பகுதி இறைபணிக்கும் என்ற பெருஞ் சிந்தையுடன் வர்த்தக தர்மம் பேணும் வண்ண நகைப் பூங்கா, **உதயா ஜுவல்லர்ஸ்** மென்மேலும் வளர்ந்து இத்தகு பணிகள் செய்து சிறக்க மாயவனை மனதார வேண்டுவதோடு எமக்கும் அவன் அருள் கிடைக்கப் பாடிப் பணிவோம். இது இந்த வருடத்தின் இரண்டாவது அமுதத் தொகுப்பு. இதிலிருந்து இவர்கள் அடைந்த பயனையும் தொகுப்புக்களின் அருமையினையும் உணர்ந்து கொள்வீர்.

க.ஆனந்தராசா (ஓய்வுநிலை அதிபர்)
"ஸ்ரீரங்கம்"
உடுப்பிட்டி.
021 321 5033

அன்பன்
"சக்தி உபாசகர்", "இசைச் சொற்பொழிவாளர்"
கவிமணி அன்னைதாஸன்

உ
ஓம் நமோ நாராயணா

# ஸ்ரீ திவ்வியப் பிரபந்த பாசுரங்கள்

## திருவாய்மொழி

வைகுந்தா மணிவண்ணனே என்பொல்லாத்
திருக்குறளா என்னுள் மன்னி
வைகும் வைகல் தொறும்
அமுதாய வானேறே
செய்குந் தாவருந் தீமையுன் னடியார்க்குத்
தீர்த் தசுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா உன்னை யான்
பிடித்தேன் கொள் சிக்கனவே.

## திருமாலை

மற்றுமோர் தெய்வமுண்டோ
மதியிலா மானிடங்காள்
உற்றபோ தன்றி நீங்கள்
ஒருவனென் றுணர மாட்டீர்
அற்றமே லொன்ற றியீர்
அவனல்லால் தெய்வம் இல்லை
கற்றினம் மேய்த்த எந்தை
கழலிணை பணிமின்நீரே.

இங்குள்ள பஜனைப் பாடல்களில் பல உக்கிரமானபோர் இம் மண்ணில் நடைபெற்ற காலங்களில் பல ஆலயங்களில் திரிந்து திரிந்து கூடிப் பாடியவை. பல ஆலய வெளியீடுகளிலும் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமொழி

கருப்பூரம் நாறுமோ
கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செல்வாய்தான்
தித்தித்தி ருக்குமோ
மருப்பொசித்த மாதவன்றன்
வாய்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன்
சொல்லாழி வெண்சங்கே.

## திருப்பல்லாண்டு

அல்வழக் கொன்றுமில் லாவணி கோட்டியர்
கோன் அபிமான துங்கன்
செல்வனைப் போலத் திருமாலே நானும்
உனக்குப் பழவடியேன்
நல்வகை யால்நமோ நாராயணா வென்று
நாமம் பலபரவி
பல்வகையாலும் பவித்திரனே உன்னைப்
பல்லாண்டு கூறுவனே.

## திருப்புராணம்

பங்கயனாகி எல்லாம் படைப்பவன் நீயே – நீண்ட
வங்கவார்கடல் சூழ்வையம் வளர்ப்பவன் நீயே – எங்கும்
பொங்கிய உயிரையெல்லாம் புசிப்பவன் நீயே – நர
சிங்கமாய் நின்ற தேவதேவனே போற்றி போற்றி.

# ஸ்ரீ தொண்டர் அடிப்பொடி ஆழ்வார்

*அருளிச் செய்த*

# திருப்பள்ளி எழுச்சி

ஓம் தொண்டர் அடிப்பொடி ஆழ்வார் திருவடிகளே சரணம்!

சரணம்! சரணம்! சரணம்!

## ஆழ்வார் வாழ்த்து

மண்டம் குடி என்பர் மாமறையோர் மன்னியசீர்

தொணடர் அடிப்பொடி தொன் நகரம் – வண்டு

தினத்த வயல் தென் அரங்கத்து அம்மானை பள்ளி

உணர்த்தும் பிரான் உதித்த ஊர்.

ஓம் ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவடிகளே சரணம்!

சரணம்! சரணம்! சரணம்!

# திருமால் திருப்பள்ளி எழுச்சி

**ராகம் - பூபாளம்** **தாளம் - அடதாளம்**

கதிரவன் குணதிசை சிகரம் வந்து அணைந்தான்

கன இருள் அகன்றது காலை அம் பொழுதாய்

மது விரிந்து ஒழுகின மாமலர் எல்லாம்

வானவர் அரசர்கள் வந்து வந்து ஈண்டி

எதிர்திசை நிறைந்தனர் இவரோடும் புகுந்த

இருங் களிற்று ஈட்டமும் பிடியோடு முரசும்

அதிர்தலில் அலைகடல் போன்று உளது எங்கும்

அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே. 01

கொழும் கொடி முல்லையின் கொழுமலர் அணவி
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ
எழுந்தன மலர் அணைப் பள்ளிகொள் அன்னம்
ஈன்பனி நனைந்த தம் இருஞ் சிறகு உதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள் எயிறு உற அதன் விடத்தினுக்கு அனுங்கி
அழுங்கிய யானையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே. 02

சுடர் ஒளி பரந்தன சூழ்திசை எல்லாம்
துன்னிய தாரகை மின்ஒளி சுருங்கி
படர்ஒளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாய் இருள் அகன்றது பைம் பொழில் கமுகின்
மடல் இடைகீறி வண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடல் ஒளி திகழ்தரு திகிரி அம் தடக்கை
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே 03

மேட்டு இள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங் குழல் ஓசையும் விடை மணிக் குரலும்
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பு இனம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரி சிலை வானவர் ஏறே
மாமுனி வேள்வியை காத்து அவர் விரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம் அரசே
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே 04

புலம்பின புள்களும் பூம் பொழில்களின் வாய்
போயிற்று கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசை கனை கடல் அரவம்
களி வண்டு மிழற்றிய கலம்பம் புனைந்த
அலங்கல் அம் தொடையல் கொண்டு அடியினை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா
இலங்கையர் கோன் வழிபாடுசெய் கோயில்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே 05

இரவியர் மணி நெடும் தேரோடும் இவரோ
இறையவர் பதினொரு விடையரும் இவரோ
மருவிய மயிலினன் ஆறுமுகன் இவனோ
மருதரும் வசுக்களும் வந்து வந்து ஈண்டி
புரவியோடு ஆடலும் பாடலும் தேரும்
குமர தண்டம்புகுந்து ஈண்டிய வெள்ளம்
அருவரை அனைய நின் கோயில்முன் இவரோ
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே 06

அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ
இந்திரன் யானையும் தானும் வந்து இவனோ
எம் பெருமான் உன் கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்க இச்சாதரர் நூற்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொருவான்
அந்தரம் பார் இடம் இல்லை மற்று இதுவோ
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே 07

வம்பு அவிழ் வானவர் வாயுறை வழக்க
மா நிதி கபிலை ஒண் கண்ணாடி முதலாக
எம் பெருமான் படிமக்கலம் காண்டற்கு
ஏற்பன ஆயின கொண்டு நன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ
தோன்றினன் இரவியும் துலங்கு ஒளி பரப்பி
அம்பர தலத்தில் நின்று அகல்கின்றது இருள்போய்
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே. 08

ஏதம் இல் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ் குழல் முழவமோடு இசை திசை கெழுமி
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தருவர் அவர் கங்குலில் எல்லாம்
மா தவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்
ஆதலில் அவர்க்கு நாள் ஓலக்கம் அருள
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே. 09

கடி மலர் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனை கடல் முளைத்தனன் இவனோ
துடி இடையார் சுரிகுழல் பிழிந்து உதறி
துகில் உடுத்து ஏறினர் சூழ்புனல் அரங்கா
தொடை ஒத்த துளபமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள் தொண்டர் அடிப்பொடி என்னும்
அடியனை அளியன் என்று அருளி உன் அடியார்க்கு
ஆட்படுத்தாய் பள்ளி எழுந்தருளாயே. 10

***ஓம் ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவடிகளே சரணம்!***

***சரணம்! சரணம்! சரணம்!***

# ஸ்ரீ ஆண்டாள் (ஆழ்வாரிணி) தாயார்
# அருளிச் செய்த திருப்பாவை
## (மார்கழி மாத பாவை நோன்பு பாசுரம்)

ஓம் ஸ்ரீ ஆண்டாள் தாயார் திருவடிகளே சரணம்!
ஓம் ஸ்ரீ மணிப் பூண்டாள் தாயார் திருவடிகளே சரணம்!

## ஸ்ரீ ஆண்டாள் தாயார் வாழ்த்து

அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கருக்கு
பன்னு திருப்பாவை பல் பதிகம் – இன் இசையால்
பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே தொல் பாவை
பாடி அருள வல்ல பல்வளையாய் – நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம் மாற்றம்
நாம் கடவா வண்ணமே நல்கு.

## திருப்பாவை பாசுரங்கள்

**ராகம் – பிலஹரி** **தாளம் – அடதாளம்**

மார்கழி திங்கள் மதி நிறைந்த நன் நாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர் மல்கும் ஆய்ப்பாடி செல்வச் சிறுமீர்காள்
கூர் வேல் கொடும் தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளம் சிங்கம்
கார்மேனி செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழ படிந்தேல் ஓர் எம்பாவாய் 01

ராகம் - பந்துவராளி தாளம் - ஆதிதாளம்

வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற் கடலுள்
பையகத் துயின்ற பரமன் அடி பாடி
நெய் உண்ணோம் பால் உண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலர் இட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக் குறளை சென்று ஓதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்தேல் ஓர் எம்பாவாய் . 02

ராகம் - பந்துவராளி தாளம் - திரிபுடைதாளம்

ஓங்கி உலகு அளந்த உத்தமன் பெயர் பாடி
நாங்கள் நம் பாவைக்கு சாற்றி நீர் ஆடினால்
தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெரும் செல்நெல் ஊடு கயல் உகள
பூங்குவளை போதில் பொறி வண்டு கண் படுப்ப
தேங்காதே புக்கு இருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேல் ஓர் எம்பாவாய். 03

ராகம் - காம்போதி தாளம் - ஆதிதாளம்

ஆழி மழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகர்ந்து கொடு ஆர்த்து ஏறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து
பாழி அம் தோளுடை பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்று அதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சர மழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராடி மகிழ்ந்தேல் ஓர் எம்பாவாய் 04

ராகம் - தோடி தாளம் - ரூபக தாளம்

மாயனை மன்னு வட மதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கை
தாயை குடல் விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்து நாம் தூய மலர் தூவி தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசு ஆகும் செப்பேல் ஓர் எம்பாவாய் 05

ராகம் - பூபாளம் தாளம் - ஆதி தாளம்

புள்ளும் சிலம்பின காண் புள் அரையன் கோவிலில்
வெள்ளை விளி சங்கின் பேர் அரவம் கேட்டிலையோ
பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சு உண்டு
கள்ளச் சகடம் கலக்கு அழியக் கால் உச்சி
வெள்ளத்து அரவில் துயில் அமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து ஹரி (அரி) என்ற பேர் அரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேல் ஓர் எம்பாவாய் 06

ராகம் - பூபாளம் தாளம் - ரூபக தாளம்

கீசு கீசு என்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து
பேசின பேச்சு அரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறவும் கலகலப்ப கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ
நாயகப் பெண் பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனை பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேசம் உடையாய் திறவேல் ஓர் எம்பாவாய் 07

ராகம் - பூபாளம் தாளம் - அடதாளம்

கீழ் வானம் வெள் என்று எருமை சிறுவீடு மேய்வான்

பரந்தன காண் மிக்கு உள்ள பிள்ளைகளும்

போவான் போகின்றாரை போகாமல் காத்து உன்னை

கூவுவான் வந்து நின்றோம் கோது கலம் உடைய

பாவாய் எழுந்திராய் பாடி பறை கொண்டு

மா வாய் பிளந்தானை மல்லரை மாட்டிய

தேவாதி தேவனை சென்று நாம் சேவித்தால்

ஆவா என்று ஆராய்ந்து அருளேல் ஓர் எம்பாவாய் 08

ராகம் - மோகனம் தாளம் - ஆதிதாளம்

தூமணி மாடத்து சுற்றும் விளக்கு எரிய

தூபம் கமழ துயில் அணைமேல் கண் வளரும்

மாமன் மகளே மணிக் கதவம் தாள் திறவாய்

மாமீர் அவளை எழுப்பீரோ உம் மகள்தான்

ஊமையோ அன்றி செவிடோ அனந்தலோ

ஏமப் பெரும் துயில் மந்திரப் பட்டாளோ

மாமாயன் மாதவன் வைகுந்தன் என்று என்று

நாமம் பலவும் நவின்றேல் ஓர் எம்பாவாய் 09

ராகம் - அசாவேரி தாளம் - ஆதிதாளம்

நோற்று சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்

மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்

நாற்றத் துளாய் முடி நாராயணன் நம்மால்

போற்ற பறைதரும் புண்ணியனால் பண்டு ஒருநாள்

கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்ப கர்ணனும்

தோற்றும் உனக்கே பெரும் துயில்தான் தந்தானோ

ஆற்றல் அனந்தல் உடையாய் அருங்கலமே

தேற்றமாய் வந்து திறவேல் ஓர் எம்பாவாய். 10

ராகம் - சகானா தாளம் - திரிபுடைதாளம்

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
செற்றார் திறல் அழியச் சென்று செருச் செய்யும்
குற்றம் ஒன்றும் இல்லாத கோவலர் தம் பொற் கொடியே
புற்று அரவு அல்குல் புன மயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமார் எல்லோரும் வந்து நின்
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பெயர் பாட
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேல் ஓர் எம்பாவாய் 11

ராகம் - கேதாரகௌளம் தாளம் - ஆதிதாளம்

கனைத்து இளம் கற்று எருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால் சோர
நனைந்து இல்லம் சேறு ஆக்கும் நற் செல்வம் நங்காய்
பனி தலை வீழ நின் வாசல் கடை பற்றி
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்திற்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்
இனித்தான் எழுந்திராய் ஈது என்ன பெரிய உறக்கம்
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேல் ஓர் எம்பாவாய் 12

ராகம் - அடானா தாளம் - ரூபக தாளம்

புள்ளின் வாய் கீண்டானை பொல்லா அரக்கனை
கிள்ளிக் களைந்தான் தன் கீர்த்திமை பாடிப் போய்
பிள்ளைகள் எல்லோரும் பாவைக் களம் புக்கார்
வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று
புள்ளும் சிலம்பின் காண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாமல்
பள்ளி கிடத்தியோ பாவாய் நீ நன் நாளில்
கள்ளம் தவிர்ந்து கலந்தேல் ஓர் எம்பாவாய். 13

ராகம் – சாரங்கா　　　　　　　　தாளம் – ஆதிதாளம்

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர்
　　வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்
செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்
　　தங்கள் திருக்கோவில் சங்கு இடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்
　　நங்காள் எழுந்திராய் நாணாதாய் நா உடையாய்
சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக் கையன்
　　பங்கயக் கண்ணானை பாடேல் ஓர் எம்பாவாய்　　14

ராகம் – சௌராஷ்டிரம்　　　　　　　　தாளம் – அடதாளம்

எல்லே இளம் கிளியே இன்னும் உறங்குதியோ
　　சில் என்று அழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன்வாய் அறிதும்
　　வல்லீர்கள் நீங்களே நானோதான் ஆயிடுக
ஒல்லை நீ போதாய் உனக்கு என்ன வேறுடையை
　　எல்லோரும் போந்தாரோ போந்தார் போந்து எண்ணிக்கொள
வல யானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
　　வல்லானை மாயனை பாடேல் ஓர் எம்பாவாய்　　15

ராகம் – யமுனாகல்யாணி　　　　　　　　தாளம் – ஆதிதாளம்

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய கோயில்
　　காப்பானே கொடி தோன்றும் தோரண வாயில்
காப்பானே மணிக் கதவம் தாள் திறவாய்
　　ஆயர் சிறுமியரோம் எமக்கு அறைபறை மாயன்
மணி வண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்
　　தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவோம்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா நீ
　　நேய நிலைக் கதவம் நீக்கேல் ஓர் எம்பாவாய்　　16

ராகம் - யமுனாகல்யாணி தாளம் - ரூபகதாளம்

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்
எம்பெருமான் நந்த கோபாலா எழுந்திராய்
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குல விளக்கே
எம் பெருமாட்டி யசோதாய் அறிவு உறாய்
அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த
உம்பர் கோமானே உறங்காது எழுந்திராய்
செம் பொற் கழல் அடி செல்வா பலதேவா
உம்பியும் நீயும் உறங்கேல் ஓர் எம்பாவாய் 17

ராகம் - சாவேரி தாளம் - ஆதிதாளம்

உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன்
நந்த கோபாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலீ கடை திறவாய்
வந்து எங்கும் கோழி அழைத்தன காண் மாதவி
பந்தல் மேல் பல்கால் குயில் இனங்கள் கூவின காண்
பந்தார் விரலீ உன் மைத்துனன் பெயர் பாட
செந் தாமரைக் கையால் சீர் ஆர் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேல் ஓர் எம்பாவாய் 18

ராகம் - ஸ்ரீராகம் தாளம் - ஆதி தாளம்

குத்துவிளக்கு எரிய கோட்டுக் கால் கட்டில் மேல்
மெத்து என்ற பஞ்ச சயனத்தின் மேல் ஏறி
கொத்து அலர் பூங் குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா வாய் திறவாய்
மைத் தடம் கண்ணினாய் நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயில் எழ வொட்டாய் காண்
எத்தனை யேலும் பிரிவு ஆற்றகில்லாய் ஆல்
தத்துவம் அன்று தகவேல் ஓர் எம்பாவாய் 19

ராகம் - தேசிகம் தாளம் - ஆதி தாளம்

முப்பத்து மூவர் அமரர்கள் முன் சென்று
கப்பம் கவிர்க்கும் ஹரி யே துயில் எழாய்
செப்பம் உடையாய் திறல் உடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா துயில் எழாய்
செப்பு அன்ன மென் முலை செவ்வாய் சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய்
உக்கமும் தட்டு ஒளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேல் ஓர் எம்பாவாய் 20

ராகம் - காம்போதி தாளம் - ஆதி தாளம்

ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மிக அளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்
ஆற்றல் படைத்தான் மகனே அறிவு உறாய்
ஏற்றம் உடையாய் பெரியாய் உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசல் கண்
ஆற்றாது வந்து உன் அடி பணியுமா போலே
போற்றி யாம் வந்தோம் புகழ்தேல் ஓர் எம்பாவாய் 21

ராகம் - பைரவி தாளம் - ஆதி தாளம்

அங்கண் மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்து உன் பள்ளிக் கட்டில் கீழே
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப் பெய்தோம்
கிண்கிணி வாய் செய்ய தாமரைப் பூப் போலே
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித்தியனும் எழுந்தால் போல் அம் கண்
இரண்டும் கொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்
எங்கள் மேல் சாபம் இழிந்தேல் ஓர் எம்பாவாய் 22

ராகம் - அடானா தாளம் - ஆதிதாளம்

மாரி மலை முழைஞ்சில் மன்னி கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவு உற்று தீ விளித்து வேரி
மயிர் பொங்க எப்பாடும் பெயர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கி புறப்பட்டு போதருமா
போலே நீ பூவை பூ வண்ணா உன் கோயில்
நின்றும் இங்ஙனே போந்து அருளிக் கோப்புடைய
சீரிய சிங்க ஆசனத்து இருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேல் ஓர் எம்பாவாய் 23

ராகம் - பியாகடை தாளம் - ஆதி தாளம்

அன்று இவ் உலகம் அளந்தாய் அடி போற்றி
சென்று அங்கு தென் இலங்கை சென்றாய் திறல் போற்றி
பொன்ற சகடம் உதைத்தாய் புகழ் போற்றி
கன்று கனி விளா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி
என்றென்றும் உன் சேவடியே ஏற்றிப் பறைகொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேல் ஓர் எம்பாவாய். 24

ராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதிதாளம்

ஒருத்தி மகனாய் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
தரிக்கிலான் ஆகி தான் தீங்கு நினைத்த
கரத்தைப் பிழைப்பித்து கம்சன் வயிற்றில்
நெருப்பு என்ன நின்ற நெடுமாலே உன்னை
அருச்சித்து வந்தோம் பறை தருதி ஆகில்
திருத் தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேல் ஓர் எம்பாவாய் 25

ராகம் - ஆரபி தாளம் - ஆதிதாளம்

மாலே மணி வண்ணா மார்கழி நீராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்ச சந்நியமே
போல்வன சங்கங்கள் போய்ப் பாடு உடையனவே
சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலின் இலையாய் அருளேல் ஓர் எம்பாவாய் 26

ராகம் - ஆனந்தபைரவி தாளம் - ஆதி தாளம்

கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா உன்தன்னை
பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சன்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே
பாடகமே என்று அனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன் பின்னே பால்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவர கூடியிருந்து
குளிர்ந்தேல் ஓர் எம்பாவாய். 27

ராகம் - தந்யாசி தாளம் - ஆதி தாளம்

கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்
அறிவு ஒன்றும் இல்லாத ஆ(க்) குலத்தில் உன்தன்னை
பிறவி பெறுத்தனை புண்ணியம் யாம் உடையோம்
குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா உன் தன்னோடு
உறவோ நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னை
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே இறைவா
நீ தாராய் பறையேல் ஓர் எம்பாவாய் 28

ராகம் - கல்யாணி தாளம் - ஆதி தாளம்

சிற்றம் சிறு காலை வந்து உன்னை சேவித்து உன்
பொற் தாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றை பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேல் ஓர் எம்பாவாய் 29

ராகம் - சுருட்டி தாளம் - ரூபக தாளம்

வங்கக் கடல் கடைந்த மாதவனை கேசவனை
திங்கள் திரு முகத்து சேய் இளையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறை கொண்ட வாற்றை அணி புதுவை
பைங்கமல தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ் மாலை முப்பதும் தப்பாமல்
இங்கு இப்பரிசு உரைப்பார் ஈர் இரண்டு மால்வரை தோள்
செங்கண் திரு முகத்து செல்வத் தீருமாலால்
எங்கும் திரு அருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய் 30

## ஸ்ரீ ஆண்டாள் தாயார் வாழி

திரு ஆடிப் பூரத்தில் ஜெகத்தில் உதித்தார் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினார் வாழியே
பெரிய ஆழ்வார் பெற்று எடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும் பூதூர் மாமுனிக்கு பின் ஆனாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்று உரைத்தாள் வாழியே
உயர் அரங்கருக்கே கண்ணி உகந்து அளித்தாள் வாழியே
மரு ஆரும் திருமல்லி வளநாடு வாழியே
வண் புதுவை நகர் கோதை மலர்ப் பாதங்கள் வாழியே.

# திருமால் அர்ச்சனை

அறிவினுக் கறிவாய் அரியே போற்றி
செறிதுழாய்க் கண்ணித் திருமால் போற்றி
மாதிரு மகள்சார் மார்பா போற்றி
ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி
உயிரை உடலாய் உற்றாய் போற்றி
உயிருக்குள் உயிராய் உறைவாய் போற்றி
மஞ்சின் வண்ண மாலே போற்றி
அஞ்சலென் றடியார்க் கருள்வாய் போற்றி
உலகினை உட்செறி வயிற்றோய் போற்றி
நலமுடன் உலகினை நல்கினாய் போற்றி

ஊனமில் சக்கரம் உடையாய் போற்றி
பானிறச் சங்கரர் பண்ணவ போற்றி
எழுவில் தண்டினை ஏந்தினாய் போற்றி
வழுவிலா வாள்கொள் மாதவ போற்றி
ஏழுல குந்தொழும் எந்தாய் போற்றி
ஆழ்கடல் அறிதுயில் அமர்ந்தாய் போற்றி
ஐயரா அணையுடை அமலா போற்றி
மையலை எமக்கு மாற்றுக போற்றி
அகமொழித் தவரை ஆள்வாய் போற்றி
இகபரம் இரண்டும் ஈவோய் போற்றி

பொய்யருக் கரிய பொருளே போற்றி
மெய்யருக் கெளிய மேலோய் போற்றி
ஒப்பில் தாமரை உந்தியோய் போற்றி
இப்புவி தோன்ற எண்ணினாய் போற்றி
கரியின் துயரைக் கழித்தாய் போற்றி
பெரிய முதலையைப் பிளந்தோய் போற்றி

ஆயர் மகளிர்க் கன்பா போற்றி
மாயம் புரியும் மாயவா போற்றி
அன்பரின் வெண்ணெய்க் காவலாய் போற்றி
பன்கவு ரவர்க்குப் பகைவா போற்றி.

சரணம் அடைந்தோர் சார்வே போற்றி
அரணம் அவாக்கிங் காவாய் போற்றி
திருமகள் உரைசெவி சேர்ப்பாய் போற்றி
அருளவன் அன்பர்க் களிப்பாய் போற்றி
நீரினில் மீனாய் நீந்தினாய் போற்றி
பாரினில் ஆமையாய் படிந்தாய் போற்றி
குறளாய் நிலத்தைக் கொண்டாய் போற்றி
திறமுடன் வளர்ந்த செம்மால் போற்றி
ஈரடி ஈருள கிட்டனை போற்றி
ஓரடி மாபலிக் குதவினை போற்றி

பன்றியாய்ப் பூமி பறித்தாய் போற்றி
கன்னர சிங்கக் காளாய் போற்றி
வில்லுடை இராமா வீரா போற்றி
வல்லன் பரசு ராமா போற்றி
மழுப்பல ராமன் மாண்பது போற்றி
தொழுமெங் கண்ணன் தூயவன் போற்றி
அவனியிற் கற்கி ஆவாய் போற்றி
இவண்நீ பல்பிறப் பெடுத்தாய் போற்றி
அரிவைக் காடை அளித்தாய் போற்றி
கரியை வேள்வியில் காய்ந்தாய் போற்றி

கஞ்சனைக் கலால் கடிந்தோய் போற்றி
வஞ்சகப் பூதகி வதைத்தாய் போற்றி
ஐவர் அன்பில் ஆழ்ந்தாய் போற்றி
அவரென் உயிரென் றறைந்தோய் போற்றி

ஆண்டாள் மாலையை அணிந்தாய் போற்றி
பாண்டவர் நட்பைப் பற்றினாய் போற்றி
அழகுறு பார்த்தன் அடுத்தோய் போற்றி
கழறிக் கீதையைக் காத்தாய் போற்றி
மலையால் மழையை மறித்தோய் போற்றி
கலைகள் பலவும் கற்றோய் போற்றி.

சிலையைப் பெண்ணாய்ச் செய்தோய் போற்றி
கொலைசெய் தாடகை கொன்றோய் போற்றி
அரக்கர் பலரை அழித்தோய் போற்றி
குரங்குப் படையினைக் கொண்டோய் போற்றி
கடலை அடைத்த கடவுள் போற்றி
உடலைச் சபரிக் கொழித்தாய் போற்றி
துதிப்போர் வினைத்தொடர் தொலைப்போய் போற்றி
கதியென் றடைவோர் களைகண் போற்றி
நினைவை அறியும் நின்மல போற்றி
அனைத்தும் காணும் அறிவா போற்றி.

கற்றோர் பரவும் காரண போற்றி
நற்றவர் நோக்கும் நாரண போற்றி
அடியவர்க் கடியன் ஆனாய் போற்றி
செடியன தீவினை தீர்ப்பாய் போற்றி
கேடொன் றில்வாக் கேசவ போற்றி
மாறுடு நாரண மாதவ போற்றி
மதுசூதனனே மாயா போற்றி
பதும நாபனே பாவன போற்றி
வாசு தேவனே வாமன போற்றி
திரிவிக் கிரம தேவா போற்றி.

அரிகோ விந்தா அச்சுதா போற்றி
தாமோ தரனே சதுரா போற்றி
ஆமா றடியரை ஆள்வோய் போற்றி
இருடி கேசா இறைவா போற்றி
இருள்தீப ஞான ஈசா போற்றி
தண்ணருட் சிறி தரனே போற்றி
எண்ணம் புகுந்தே இனிப்போய் போற்றி
எங்கும் இங்கும் விண்டுவே போற்றி
பொங்கும் கீர்த்தி பூரண போற்றி
சிந்தனை செய்பவர் செல்வா போற்றி

பந்தம தறுக்கும் பரமா போற்றி
முந்தை வினையை முடிப்போய் போற்றி
அந்தமில் இன்பம் அருள்வாய் போற்றி
செந்தமிழ் மூன்றாய்த் திகழ்வாய் போற்றி
நந்தமிழ்ப் பரப்பின் நடப்போய் போற்றி
செம்மை சேர்திரு வரங்கா போற்றி
மைபடி வேங்கட மலையோய் போற்றி
கச்சியம்பதி வாழ் கன்னலே போற்றி
அர்ச்சையா எங்கும் அமைந்தாய் போற்றி
திருவல்லிக் கேணியில் திகழ்வோய் போற்றி

துருவனுக் கருளைச் சொரிந்தாய் போற்றி
தூயுடல் கொண்டு தோன்றினோய் போற்றி
தோயும் கன்மம் துன்னாய் போற்றி
தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி
பெண்ஆண் உருவாய்ப் பிறங்குவோய் போற்றி
நல்லன உலகிடை நல்குக போற்றி
தாமரைத் திருவடி தந்தருள் போற்றி
மாமகள் கொழுநநின் மலர்த்தாள் போற்றியே.

# பஜனைப் பாடல்கள்

## முதல் வணக்கம்

விநாயகா விநாயகா
வினைகள் களைவாய் விநாயகா
முன்னை முதல்வனே விநாயகா
மூஷிக வாகன விநாயகா
அன்னையின் பாலனே விநாயகா
ஆறுதல் அளிப்பாய் விநாயகா – விநாயகா

ஆனைமுகனே விநாயகா
ஐங்கர நாயகனே விநாயகா
வேழமுகத்தனே விநாயகா
வேண்டும் வரம் தா விநாயகா – விநாயகா

ஐங்கர நாதனே விநாயகா
சங்கரன் பாலா விநாயகா
எங்குறை தீர்த்த விநாயகா
எம்முன்னே வா வா விநாயகா – விநாயகா

### ✧மடிகின்ற மக்களுக்காக எப்படி வரப்போறாய் (1990)

கண்ணா கண்ணா வா வா எங்கள் கார்முகில் வண்ணா வா வா
வெண்ணெய் திருடிய வேளையிலே உந்தன் அன்னையிடம் பிடிபட்டவனே
கலியுக தெய்வம் நீ ஐயா கலங்கிடும் எங்களைப் பாரையா
கவலைகள் தீர்த்திட கண்ணா வா கருணை பொழிந்திடும் மன்னா வா
தரணியில் தர்மம் நிலைத்திடவே தசரத மைந்தனாய் வந்தவனே
மரண பயத்தை ஒழித்தருளே சரண மடைந்தோம் சந்நிதியில்
இப்புவி மாந்தர் மகிழ்ந்திடவே இரண்யனை நீ கொன்றவனே
இன்னருளைத் தரகண்ணா வா எங்களையாண்டிடும் மன்னா வா
பேதை கலங்கிய வேளையிலே வண்ணச்சேலை கொடுத்த எம் கோகுலனே

வாதை யுறுகின்ற மக்களுக்கு பாதையைக் காட்டு பரந்தாமா
கண்டவர் அஞ்சிய கம்சனையே கொன்றுகுவித்த எம் கோபாலா
நம்மவர் வருந்துதல் சம்மதமோ நம்துயர் தீர்த்திடு கோவிந்தா
கொடியவர் கொடுமை களைந்திடவே கோகுலனாக வந்தவனே
**மடிகின்ற மக்களைக் காப்பதற்கு எப்படி வரப்போறாய் சொல்லப்பா?**
பூமியை வாட்டிய பூதனையைப் பூண்டுடன் அழித்த எம் புண்ணியனே
பாவிகள் எங்களைக் காத்திடவே பார்த்தருள்வாய் பார்த்த சாரதியே.

## ✧ ஒப்பரிய ராம நாமம்

ராம ராம ராம ராம ராம ராம ராம ராம்
ராக தாள பாவத் தோடு நாமஞ் சொல்வோம் இங்கு நாம்
(ராம நாம.........)

ஆஞ்ச நேயர் போற்றி ஓதும் அருமை மிகு ராம நாமம்
வாஞ்சையுடன் ஓதுவோர்க்கு வலிமை தரும் சோம பானம்
(ராம நாம.........)

ரோக தோஷ பாவ வாத நோய்களெல்லாம் வீழ்ந்திட
ராம ராம ராம வென்றும் நாமஞ் சொல்வீர் வாழ்ந்திட
(ராம நாம.........)

துன்பங் கொண்டு சீதை அன்றுதுடிதுடித்து வாழ்ந்த வேளை
இன்பம் தந்து காத்த நாமம் எல்லையில்லா ராம நாமம்
வாயுமகன் வானத்திலே வலிமையுடன் பறப்பதற்கு
ஓய்வில்லாமல் சொன்னநாமம் ஒப்பரிய ராம நாமம்
(ராம நாம.........)

**ஓம் ஓம் ஓமென்று உலகையாழும் பிரணவம் போல்**
**ராம் ராம் ராம் என்ற நாமம் எம்மைக் காத்திடும்.**
(ராம நாம.........)

## ✧ விரும்பிடும் அமைதிக்கு அரங்கனைப் பாடுவோம்

நாம் பாடுவோம் இங்கு நாம் பாடுவோம்
நாராயணரை வேண்டி நாம் பாடுவோம்

வண்ணையில் இருப்பவர் நாராயணர்
வருத்தங்கள் தீர்ப்பவர் நாராயணர்
கண்ணை நிகர்த்தவர் நாராயணர்
கவலைகள் தீர்ப்பவர் நாராயணர் (நாம் பாடுவோம்)

இராமவதாரரும் நாராயணர்
வாமன ரூபரும் நாராயணர்
தசாவதாரங்கள் எடுத்தாரிவர்
தர்மத்தைக் காப்பவர் நாராயணர் (நாம் பாடுவோம்)

அன்புடன் ஒரு கணம் நினைத்தாலிவர்
அம்புபோல் எம்முன்னே வருவாரிவர்
துன்பங்கள் துடைக்கவே உருவானவர்
என்றென்றும் எங்களைக் காப்பாரிவர். (நாம் பாடுவோம்)

திருப்பதி மலையானை நாம் பாடுவோம்
திருப்பணி இதுவெனவே பாடுவோம்
கரும்பெனும் அவன்புகழ் நாம் பாடுவோம்
**விரும்பிடும் அமைதிக்கு நாம் பாடுவோம்.** (நாம் பாடுவோம்)

# அமைதியைத் தருவாய் கோவிந்தா

திருப்பதி மலைமேல் இருப்பவனே
தீராத வினையெல்லாம் தீர்ப்பவனே
அருட்பெருங்கடலே கோவிந்தா
அமைதியைத் தருவாய் கோபாலா.

வல்லிபுரத்துறை மாயவனே
தொல்லைகளனைத்தையும் தீர்ப்பவனே
சங்குடன் சங்கர மானவனே
சங்கடந் தீர்ப்பாய் கோவிந்தா.

பொன்னாலயந்தனில் உறைபவனே
பொன்னாமையாக வந்தவனே
வரதராஜனே கோவிந்தா
வருத்தங்கள் தீர்ப்பாய் கோபாலா.

வண்ணையம்பதியில் அமர்ந்தவனே
வந்தோரை வாழ்ந்திட வைப்பவனே
கண்ணின் மணியே கோவிந்தா
கவலைகள் தீர்ப்பாய் கோபாலா.

ஓங்கியே கோபுரங் கொண்டவனே
உலகோரை உய்விக்க வந்தவனே
காக்கும் கடவுளே கோவிந்தா
கருணை புரிவாய் கோபாலா.

ஹரி ஹரி ஓம் நாராயணா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா
ராம ஜெயம் ஸ்ரீ ராம ஜெயம்
நம்பினோர்களுக்கு ஏது பயம்

கோவிந்தா ஹரி கோவிந்தா
கோபாலா ஹரி கோபாலா
கோகுல ரமணா கோவிந்தா
கோபாலா ஹரி கோபாலா.

## நாமார்ச்சனை (இராகமாளிகை)

ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா
நாராயணா நமோ நாராயணா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா

அனந்த சயனா ஆனந்த ரூபா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா
நாராயணா ஹரி நாராயணா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா

வைகுந்த வாசா வைதேகி ரமணா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா
நாராயணா நமோ நாராயணா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா

கோகுல ரமண கோபால கிருஷ்ணா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா
நாராயண ஹரி நாராயணா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா

வண்ணையம் பதியா வாமன ரூபா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா
வண்ணயம் பதியா........ வாமன ரூபா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா

வங்கக் கடல் சூழ் வல்லிபுரத்தா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா
வங்கக் கடல் சூழ்....... வல்லிபுரத்தா
ஹரி ஹரி ஹரி ஓம் நாராயணா.

ராம ராம ராம ராம ராம ராம ராம ராம் (2)
ராமகிருஷ்ண வாசுதேவ ராம ராம ராம ராம்
ஹரே ராமஹரே ராம ராம ராம ராம ராம்
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ராம்
ராம ராம ராம ராம ராம ராம ராம ராம் (2)
ராம ராம ராஜா ராம ராம், ராம ராம சீதா ராம ராம். (2)

## நாமார்ச்சனை -2

கேசவா மாதவா மதுசூதனா
ஸ்ரீதரா கோவிந்தா நாராயணா
முரளி மனோகர ஜனார்த்தனா
அச்சுதா ஆனந்த நாராயணா (3)

அனந்த சயனே நாராயணா
ஆனந்த ரூபனே நாராயணா
நந்தகோபாலா ஸ்ரீ நாராயணா
கிருஷ்ணா முகுந்தா ஸ்ரீ நாராயணா **(கேசவா.....)**

கோபரிபாலா ஸ்ரீ நாராயணா
கோபால கிருஷ்ணா ஸ்ரீ நாராயணா
வாமனரூபா ஸ்ரீ நாராயணா
வைதேகி ரமணா ஸ்ரீ நாராயணா (2) **(கேசவா.....)**

வெங்கட ரமணா ஸ்ரீ நாராயணா
வேணு கோபால ஸ்ரீ நாராயணா
சங்கட ஹரணா ஸ்ரீ நாராயணா
பங்கஜ நாபா ஸ்ரீ நாராயணா
கோவிந்தா கிருஷ்ண ஜெய் (2)
கோபாலா கிருஷ்ண ஜெய் (2)
கோவிந்தா ஹரி கோவிந்தா (2)
கோபாலா ஹரி கோபாலா (2)
**ஹரி ஹரி கோவிந்தா நாம சங்கீர்த்தனம்**
**கோவிந்தா கோவிந்தா.**

## ✧ தாலாட்டித் தொழுவோம்

ஜெய ஜெய கிருஷ்ணா வா எங்கள்
கோகுலக் கண்ணா வா
கண்ணா ஓடிவா கடைக்கண்ணால் எம்மைப் பார்
சக்கரத்தாழ்வாரே வா எங்கள் சஞ்சலந் தீர்த்திட வா
கண்ணா ஓடி வா மணிவண்ணா ஓடி வா (ஜெய ஜெய .......)

கொட்டிலில் நீயிருந்தாய் இன்று கோபுரம் கொண்டுவிட்டாய்
தொட்டிலாய் மனதமைத்தோம் அதில் தூங்கிட வாருமையா
(ஜெய ஜெய .......)

வண்ணையில் நீயிருந்து எம்மை வாவென்றழைப்பவனே
கண்ணனே கோவிந்தா எங்கள் கவலைகள் தீரையா
(ஜெய ஜெய .......)

மூவடியாலழந்து அந்த மாவலியை வென்றாய்
பூவடி போற்றுகின்றோம் எங்கள் புன்மைகள் தீர்த்திடையா
(ஜெய ஜெய ...)

பொன்னாலயந்தனிலே பொன்னாமையாய் வந்தாய்
உன்னால் முடியாதது இந்த உலகினில் இல்லையையா
(ஜெய ஜெய .......)

அட்சய பாத்திரத்தால் அந்த அபலையைக் காத்தவனே
சச்சரவினை தீர்க்க எம்முன் சடுதியாய் வந்திடையா
(ஜெய ஜெய .......)

கண்ணா மணிவண்ணா ஜெய கிருஷ்ணா கோவிந்தா
பொன்னாலய மன்னா ஒரு புதுமை செய் கண்ணா
(ஜெய ஜெய .......)

நாத வடிவானவன் எம் நம்பிக்கைப் பொருளானவான்
வேதமுதலானவன் வரம் வேண்டத் தருவானவன்
கண்ணா ஆரிராரோ மணிவண்ணா ஆரிராரோ (2)
ஆரிராரோ ஆரிராரோ ஆரிராரோ ஆரிராரோ (2)
ஹரி ஹரி ஓம் நாம சங்கீர்த்தனம் கோவிந்தா கோவிந்தா.

## ✧ தாயே எம்மைக் காப்பாற்று

அம்மா அம்மா எம்தாயே ஆறுதல் தந்தெம்மைக் காப்பாயே
இம்மாநிலத்தில் நீதானே எம்மை ஆளுந் தாய்தானே
எங்கள் துர்க்கைத் தாய்தானே
இங்கே நாம் படும் வேதனைகள் எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும் ஏனோ எம்மை வாட்டுகின்றாய்
எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே புதுமை ஒன்றைச் செய்திடம்மா
**(அம்மா அம்மா)**

அல்லும் பகலும் அழுகுரல்கள் எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை புழுவாய்த் துடிக்க வைக்குதம்மா
சொல்லால் வடிக்க முடியாத துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது தாயே எம்மைக்காப்பாற்று
**(அம்மா அம்மா)**

ஒன்றா இரண்டா நாம்சொல்ல உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும் ஏனோ எம்மை வாட்டுகின்றாய்
நின்றால் நடந்தால் உன்நினைவு எங்கும் எதிலும் உன்காட்சி
துன்பம் வராமல் காத்தெம்மை துணையாய் எமக்கு வந்திடம்மா
அம்மா.... அம்மா.... அம்மா.... அம்மா....

**(20.07.1993ல் அன்னை துர்க்கா துரந்தரியால்**
**அன்னைதாஸனை உலகிற்கு காட்டிய படல்)**

## ✧ அழுகுரல் கேட்டு நீ ஓடோடி வந்திடம்மா

அம்மா எம் அம்பிகையே உந்தன் அருள் ஒன்றே எம் துணையே
அழுதிடும் எங்களின் அழுகுரல் கேட்டு நீ ஓடோடி வந்திடம்மா
கடல்போல் துயர் நடுவே நாம் கலங்கிடும் வேளையிலே
காளியின் வடிவினிலே எமைக் காக்கவென்று இருப்பவளே **(அம்மா)**

உறவினர் உதவியில்லை எமக்குதவிட யாருமில்லை
நாம் படுகின்ற துயரமதை உந்தன் பார்வையால் தீருமம்மா **(அம்மா)**

அணைத்திட ஒருவரில்லை எமக்கு ஆறுதல் அளிப்பாரில்லை
அன்னையே உன்னையல்லால் எமக்கு ஆறுதல் அளிப்பவர் யார் (அம்மா)

பாடிடும் எங்கள் முன்னே நீயும் பறந்தோடி வாவேனம்மா
ஓடியே வந்து எங்கள் உறுபிணி தீருமம்மா (அம்மா)

அன்னையே அன்னை என்று நாம் அலறுவது கேட்கலையோ
பரிவுடன் ஊஓடிவந்து – இந்தப் பாவிகளை காத்திடம்மா (அம்மா)

## ✧ தாவி வந்து தாங்கிடம்மா நாகபூஷணி

நயினையிலே கோவில் கொண்டாள் நாகபூஷணி
பஜனை பாட வைத்தவளெம் நாகபூஷணி
அயன் எழுத்தை மாற்றிடுவாள் நாகபூஷணி
பயம் எமக்கு ஏன் அவளின் பாதமே கதி (நயினையிலே.....)

இந்துக் கடல் மீதினிலே கோவில் கொண்டவள்
எந்தமதம் சார்ந்தவர்க்கும் தாயைப் போன்றவள்
கந்தனுடன் கணபதியைச் சேர்த்துக் கொண்டவள்
எந்தவினை வந்திடினும் எம்மைக் காப்பவள் (நயினையிலே.....)

இராவணனின் சாமகானம் தனை ரசிப்பவள்
நாரணனின் தங்கையிவள் நாகம் பூண்டவள்
பூரணி புராதனியிப் புவியை ஈன்றவள்
காரணியெம் கண்மணியின் கழல்கள் போற்றுவோம்
(நயினையிலே...)

சேய்களிங்கு செந்தணலில் தெரிய வில்லையோ?
தாயைத்தேடித் தவிப்பதுவும் புரிய வில்லையோ?
பாவிகளைப் பார்த்த பின்பும் பரிவு மில்லையோ?
தாவிவந்து தாங்கிடம்மா நாக பூஷணி. (நயினையிலே.....)




நவ நாகரீக நங்கையர்களுக்கேற்ற நவீன டிசைன்களினாலான காப்பு, பூட்டுக்காப்பு, அட்டியல் வகைகள், பதக்கங்கள், தோடுகள், சிமிக்கிகள் அனைத்தும் உள்ளூர், சிங்கப்பூர் கை வண்ணத்திலான ஆபரணங்களை உத்தர வாதத்துடன் பெற நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

**உதயா ஜுவல்லர்ஸ்**

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

உண்மை அறிவீர். நன்மை பெறுவீர்.


சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ், பலாலி வீதி, கோண்டாவில். 077 3068982